**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.13 of 2017

Deposition of D.W.1

Name of the Witness: திரு.மணிவேல்

Date : 08.04.2025

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பெங்களூரில் குடியிருக்கிறேன். நான் டெக்ஸ்டைசைலில் டிப்ளமோ படித்துள்ளேன். நான் 1982ல் வேலைக்கு சேர்ந்தேன். நான் பெங்களூரில் தான் வேலை செய்து 2020ல் ஒய்வு பெற்று விட்டேன். எனது அப்பா பெயர் கண்ணு (எ) மாதையன். என் அம்மா பெயர் கண்ணம்மாள். என் அப்பா, அம்மா மல்லிக்கல் கிராமத்தில் குடியிருந்தார்கள். என் அப்பாவிற்கு தற்போது 92 வயதாகிறது. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் உள்ளது. என் அப்பா விவசாயம் செய்தார். 1ம் பிரதிவாதி 2ம் வாதியை ஏமாற்றி ஏற்படுத்திக் கொண்ட தானசெட்டில்மெண்ட் தேதி 10.03.2016ம் தேதிய ஆவணத்தின் மூலம் 2ம் பிரதிவாதி பெயரில் 13.07.2016ல் ஏற்படுத்திய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 13.07.2016ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பேரில் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் மோசடியானது, சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவருடைய பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல.